கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்

ம.சா. 1 நாள் 30.08.2024

வழக்கு எண் MCOP No. 25/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரோஜா | ஊர் | : | G.மீனாட்சிபுரம் |
| கணவர் பெயர் | : | பர்மாதுரை | தாலுகா | : | பெரியகுளம் |
| தொழில் | : | கூலி | வயது | : | 54/2024 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

<u>மனுதாரர் தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் 1 ம் மனுதார் ஆவேன். 2 ம் மனுதாரர் தரப்பிலும் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனது தரப்பில் நிருபண பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நிருபண பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது மகன் சதீஸ்குமார் விபத்தில் இறந்ததற்கு தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் மசாஆ 1**. மேற்படி வழக்கில் தாக்கல் செய்த **இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் மசாஆ 2**. மேற்படி விபத்து சம்பந்தமான **மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மசாஆ 3**. எனது மகனின் **பிரேத பரிசோதனை அறிக்கை மசாஆ 4**. எனது மகன் சதீஸ்குமாரின் **இறப்பு சான்றிதழ் மசாஆ 5**. எனது மகனின் **வாரிசு சான்றிதழ் மசாஆ 6**. எனது மகன் ஓட்டிச் சென்ற TN–59–AB–5643 என்ற இரு சக்கர வாகனத்தின் **பதிவு சான்றிதழ் மசாஆ 7**. விபத்தை ஏற்படுத்திய TN–32–AF–5008

என்ற டயோடா எட்டியோஸ் காருக்கான **பாலிசி நகல் மசாஆ 8**. மனுவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும்.

(2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை,
அப்படியே ,என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி
உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு,
சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு
செய்யப்பட்ட விவரத்தை ஒப்புக் கொண்டு,
என் முன்னிலையில் கையொப்பமிட்டார்
என்று உறுதி அளிக்கிறேன்.

**(ஒம்/- S.சமீனா)**
**30.8.2024**
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.